**செ.வெ.எண்:20** **நாள்:09.09.2021**

**<u>செய்திக்குறிப்பு</u>**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், தமிழ்நாட்டில் வேலைநாடும் இளைஞர்களையும், வேலையளிக்கும் தனியார் துறை நிறுவனங்களையும் இணையதளம் வழியாக இணைத்து, வேலைவாய்ப்புகளை பெற்று தரும் நோக்கில், பிரத்யேகமாக "தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்" "TamilNadu Private Job Portal" (https://www.tnprivatejobs.tn.gov.in) என்ற இணையதளம் துவங்கப்பட்டுள்ளது.

தனியார் துறையில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள், இவ்விணையதளத்தில் நேரடியாக பதிவு செய்து தங்களின் கல்வித்தகுதி, முன்அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்ற பணிவாய்ப்புகளை பெறுவதற்கும், தனியார் துறை சார்ந்த அனைத்து சிறு, குறு, நடுத்தர மற்றும் பெருநிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் காலிபணியிடங்களை இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும், அக்காலிபணியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்து பணிநியமனம் செய்வதற்கும் இவ்விணையதளம் வழிவகை செய்யும். வேலையளிப்போர் மற்றும் வேலைநாடுநர்களுக்கு இச்சேவைகள், கட்டணமின்றி தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. ஏற்கனவே கரூர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் வாயிலாக சிறிய மற்றும் பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய சூழ்நிலையில், இதற்கு மாற்றாக "தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்" மூலம், இணையவழி நேர்காணல் மற்றும் இணையவழி பணிநியமனம் ஆகிய வசதிகளை பயன்படுத்தி, இளைஞர்கள் இணையவழியாக தொடர்பு கொண்டு, தனியார் துறை பணிவாய்ப்புகளை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்போர் இவ்விணையதளத்தில் பதிவுசெய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **மரு.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப.**, அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்புக்கு:04324-223555.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கரூர்.**